www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்

## LIBERATION TIGERS OF THAMIL EALAM

### சிறிலங்கா இராணுவத்தை வெளியேற்றுவோம்

தமிழீழ மண்ணில் சிங்கள ஆளும் வர்க்கத்தையும், சிங்கள பெருந்தேசியவாத ஒடுக்கு முறையையும் கட்டிக்காக்கும் அரசு படைகளை அழித்தொழிப்பது எமது போராட்டத்தின் முக்கிய அம்சமாகும். அரசு படைகளின் மீதான இன்றைய இத்தாக்குதல் பரந்துபட்ட தமிழ் மக்களின் ஆதரவுடன் கூடிய எமது இயக்கத்தின் புரட்சிகர நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகும்.

கசாப்புக் கடைக்காரன் கத்தியைத் தானே கீழே போடமாட்டான். நாமே ஆவனசெய்யவேண்டும். சிறிலங்கா இராணுவத்தை நாமே வெளியேற்றுவோம் என்பதற்கான செயற்திறனும், உறுதியும் எம்மிடம் உண்டு.

இந்த எமது நடவடிக்கைகளுக்கு, சிங்கொண்ட தமிழ் மக்கள் பின்னணித் தளமாக அமைகிறார்கள். மக்களின் கிளர்ச்சிகர உணர்வுகளின் வெளிப்பாடாக எமது ஆயுதப்போராட்ட நடவடிக்கைகள் அமைகின்றன. அதேசமயம் மக்களின் போராட்ட உணர்வுகள் வளர்வதற்கான உந்து சக்தியாகவும் அமைகின்றன.

> என்னைத் தூக்கிலிடுவன்மூலம் பல்லாயிரக்கணக்கான குட்டிமணிகள் உருவாகுவார்கள். அவர்கள் என்னைப்போல் அப்பாவிகளாக இருக்கமாட்டார்கள். தமிழீழத்தை மீட்டெடுக்கும் விரமும், தீரமும் மிக்கவர்களாகவே இருப்பார்கள்.
>
> — குட்டிமணி.

தமிழீழத்தை வென்றெடுப்பதற்கான சரியான பாதை எதுவென்பதை நடைமுறை அனுபவங்களிலிருந்து கற்று, போராட்டத்தை வழிநடத்தும் எமது இயக்கத்தின் பின்னே வீரமும், தீரமும் மிக்க போராளிகள் நிச்சயம் ஆயிரமாயிரமாக அணிதிரள்வார்கள். விடுதலைப் போராளி பிரபாகரனின் வழிகாட்டலில் நாம் தொடர்ந்து முன்னேறுவோம்.

வெல்க தமிழீழம்!

மத்திய குழு
தமிழீழ விடுதலைப் புலிகள்

### புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!

சிறிலங்கா இராணுவ வீரனுக்கு,

ஒரு தமிழீழ விடுதலைப் புலியிடமிருந்து. . .

தமிழீழ மண்ணில் இன்று கொழுந்துவிட்டெரியும் விடுதலை எழுச்சியை நீ அறிவாய். எமது மண்ணின் விடுதலையை நாம் வென்றெடுப்பது தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நியதி. சிங்களப் பெருந்தேசியவாத அரசு பயங்கரவாதத்தின் கருவியாக, தமிழீழ விடுதலைப் போராளிகளைத் தேடியலைகின்ற நரவேட்டையின் கருவியாக, நீ செயற்படுகின்றாய்.

தமிழீழத்தின் வீதிகளில் நீ காக்கியணிந்து, ஆயுதமேந்தி, வாகனங்களில் வலம் வருவதை நாம் பார்க்கிறோம். ஒரு வயதான தாயையோ, தந்தையையோ அல்லது சகோதரியையோ பராமரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தின் பேரில், கூலிக்காக நீ ஆயுதமேந்துகின்றாய், சிறிலங்காவின் ஆட்சிப்பீடத்தில் இருக்கும் சுயநலக் கும்பலின் வளத்துக்கு மேலும் உரம் போட நீ பலியாகின்றாய். இதே ஆளும் வர்க்கம் வெகு விரைவில் உன்னை, உனது சுற்றத்தாருக்கும், வர்க்கத்தினருக்கும் எதிராகத் திருப்பும், அவர்களின் எழுச்சியை நசுக்கவும் நீயே ஆட்சிப்பீடத்தின் கருவியாகப் பயன்படுவாய்.

தேச விடுதலைக்கான வேட்கையில் இயங்கும் நாங்கள், ஆளும் வர்க்கத்தின் கைப்பாவையான உன்னை எதிர்க்க நிர்ப்பந்திக்கப்படுகிறோம். போர்முனைச் சந்திப்பில் நீ பலிக்கடாவாகின்றாய். விடுதலைப் போர்ப் பாதையில் எமது சாவு மகத்தானது, அர்த்தமுள்ளது, கூலிக்காக மாரடிக்கும் உனது சாவோ அற்பமானது.

அரசு பயங்கரவாதத்தின் பகடைக்காயான நீ, தமிழீழ மண்ணில் புரிந்த கொலைகளும் நாசவேலைகளும் தமிழ் மக்கள் மனதில், அழியாது உறைந்துபோய்க் கிடக்கின்றன. ஆளும் வர்க்கத்தின் கறை படிந்த கைங்கரியங்களை நீ செய்து மடியாதே. அவர்களின் சுபீட்சத்துக்காக உனது தார்மீகத்தையும், மனிதநேயத்தையும் இழக்காதே. ஒடுக்கப்பட்ட சிங்கள விவசாயத் தொழிலாளிகளின் பக்கத்தில் நீ சேர்ந்து, ஆளும் வர்க்கத்துக்கு எதிராகப் போராடும் வேளையில் தான் நீயும் நாமும் நேசமொழியில் பேசிக்கொள்ள முடியும். அப்படி நீ போராடுவாயானல் அப்பொழுதுதான் எமது போராட்டத்தின் இதயத் துடிப்பை நீ புரிந்து கொள்வாய்.

வெளியீடு:- பிரச்சார வெளியீட்டு வாரியம், தமிழீழ விடுதலைப் புலிகள்.

நண்பர்களே!
தமிழீழ விடுதலைப்புலிகளின் அறிக்கையை இத்துடன் காண்க
தமிழீழத்தில் நரவேட்டையாடித்திரியும் ஸ்ரீலங்கா கூலிப்பட்டாளத்திற்கு
எதிராகவும், அரச பயங்கரவாதத்தை முறியடித்து சுதந்திர தமிழ் ஈழம்
உருவாகவும், ஆயுதந்தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும்
விடுதலைப்புலிகளின் தீரத்தை நாம் போற்றுகின்றோம்.
வெறும் போற்றுதலும், புகழ்மொழிகளும் மட்டுமல்லவே எமது கடமை;
வீரர்களின் தன்னலமற்ற தியாகத்திற்கு இணையாக நாம்
செய்யாவிடினும்; அவர்களின் தேவைகளை உணர்ந்து அறிந்து
செய்யும் பண்பு கூடவா நம்மிடம் இல்லை? இருக்கின்றது -
— என்று சொல்லிக்கொண்டேயிருந்து வெல்வோமா தமிழீழம்?
உங்களின் சிந்தனை, கல்வி, தொழில்நுட்பம், செல்வம்
செல்வாக்கு மூலம் விடுதலை வீரர்களின் செயல்-
திட்டங்களை வலிவுபடுத்தி - விரைவுபடுத்துங்கள்.
இது தமிழ் ஈழப்போராட்டத்தில் உங்களது பங்கு.
உரிமையுடன் அழைக்கின்றோம் உங்களது கடமை
"லண்டன் தமிழ் மன்றம்"
தொடர்பு கொள்ளுங்கள்:-
202-7190
51, SELBORNE GARDENS, LONDON. NW4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்